# துறையூர் நகராட்சி

2021 ஆம் வருடம் மே மாதம்10.05.2021 திங்கள் கிழமை (தமிழ் பிலவ வருடம் சித்திரை மாதம் நாள்.27) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 10.05.2021 | 01 | துறையூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் JCB வாகனம் எண்.TN 48 BA 2192-க்கு ஆண்டு காப்பீடு 13.10.2020-வுடன் முடிவடைந்து விட்டதால் மேற்படி வாகனத்திற்கு காப்பீடு மேலும் ஓராண்டிற்கு புதுப்பிக்க வேண்டிய தொகை ரூ.17266/-ஐ THE ORIENTAL INSURANCE COMPANY LIMITED, Branch Office, Lakshmi Complex, Salai Road, Trichy-18 நிறுவனம் மூலம் செலுத்திட கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே, அலுவலக JCB வாகனம் எண். TN 48 BA 2192-க்கு ஆண்டு காப்பீடு புதுப்பித்தல் தொகை ரூ.17266/- மட்டும் THE ORIENTAL INSURANCE COMPANY LIMITED, Branch Office, Lakshmi Complex, Salai Road, Trichy-18 நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண். 4884/2018/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்: 665 அனுமதிக்கப்பட்டது. |
| 10.05.2021 | 02 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், துறையூர் நகராட்சி, வார்டு E, பிளாக் 11, நகரளவு எண்.11/4 சர்வே எண்.305/3 பகுதி-ல் கட்டுப்பட்ட 0.465 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் சாலை அமைப்பு ஒப்புதல் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களது ந.க.எண்.3128/2020/திமா-3 நாள்.25.02.2021-ல் வழங்கப்பட்டது.<br>மேற்படி கடிதத்தின்படியும், வரைபடத்தில் கண்டுள்ள சாலை மற்றும் உள்ளாட்சி பயன்பாட்டிற்கான பொது இடம் திரு.ராஜேந்திரன் த/பெ.குப்புசாமி என்பவர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு 11.03.2021ம் தேதி நன்கொடைப்பத்திரம் பதிவு எண்.1868/2021-ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டது. | தீர்மான எண்: 666 அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | இணை இயக்குனர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு, திருச்சிராப்பள்ளி அவர்களது ந.க.எண்.3128/2020/திமா-3 நாள்.03.05.2021ம் தேதிய கடிதத்தில் மேற்காணும் மனைப்பிரிவுக்கான அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள வடிகால், தெருவிளக்கு மற்றும் சாலைகள் உதவிப்பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் தார்சாலை அமைக்கப்பட்டதன் நிழற்படம் மற்றும் மின்விளக்கு அமைக்கப்பட்டதன் நிழற்படம் ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்காணும் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.757/2021/எப்1)<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | |
| 10.05.2021 | **03** | துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பரவலை தடுத்திடும் பொருட்டு செலவினம் மேற்கொள்ள ஏற்கனவே நகர் மன்ற தீர்மான எண்.655 நாள். 26.02.2021-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி மற்றும் பொது சுகாதார நடவடிக்கைகளுக்கு கீழ்க்கண்ட சுகாதார கிருமி நாசினிகள் வாங்கிகொள்ள 06.05.2021 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்: 667<br>அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண் | பொருட்களின் விபரம் | SRI AKSHAYA TRADERS, No.4/10 East Sarayapattarai Street, Woraiyur, Trichy-620 003. | THIRUMALAI TRADERS, FF-3,Renga ,Compiex, Near Ramba Theatre, Trichy-620 002 | SRI AMMAN AGENCIES Shop NO.3, 1/3856/1, Gokulam colony, bikshandarkovil, No.1. Tolgate, Trichy-621 216. |
|---|---|---|---|---|
| 1 | Bleaching Powder | Per kg Rs.54/- (GST Extra) | Per kg Rs.42,37/- (GST Extra) | Per kg Rs.56/- (GST Extra) |
| 2 | Lizol | Per Litter Rs.194/- (GST Extra) | Per Litter Rs.160/- (GST Extra) | Per Litter Rs.198/-(GST Extra) |
| 3 | Hypo Chloride | Per Litter Rs.194/- (GST Extra) | Per Litter Rs.194/- (GST Extra) | Per Litter Rs.194/-(GST Extra) |
| 4 | Lime Powder | Per kg Rs.12/- (GST Extra) | Per kg Rs.9.5/- (GST Extra) | Per kg Rs.13/- (GST Extra) |
| 5 | MASK | Per Mask Rs.7/- (GST Extra) | Per Mask Rs.5/- (GST Extra) | Per Mask Rs.8/- (GST Extra) |
| 6 | Gloves (Use and throw) | One Set Rs.21/- (GST Extra) | One Set Rs.16.10/- (GST Extra) | One Set Rs.22/- (GST Extra) |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>மேற்கண்டவாறு வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் திருமலை டிரேடர்ஸ் திருச்சி அவர்களது விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மேலும், கொரோனா நோய் தொற்று பரவல் தடுப்பு முன் நடவடிக்கை பணிக்கு மேற்கண்ட கிருமி நாசினிகள் அவசியம் தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர்/ஆணையரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருமலை டிரேடர்ஸ் திருச்சி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தினை SDRF(COVID-19)நிதியின் கிழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் 810/2020/எச்1)<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>10.05.2021</td>
<td>04</td>
<td>துறையூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 18 கழிவறைகளில் மராமத்து பணிகள் மேற்கொண்டு, பொதுசுகாதாரத்தை மேம்படுத்தவும், ODF+ சான்றினை பெற்றிடவும் ஏதுவாக 18 கழிவறைகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1345/2021/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:668<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>10.05.2021</td>
<td>05</td>
<td>துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனங்களுக்கு 2021-2022ம் ஆண்டு சாலைவரி 1% வரி மற்றும் பசுமை வரி கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டியுள்ளது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வாகன எண்</th><th>பசுமை வரி</th><th>சாலை வரி</th><th>1% வரி</th><th>சர்வீஸ் சார்ஜ்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td>TN45V0856</td><td>505</td><td>3000</td><td>30</td><td>0</td><td>3535</td></tr>
<tr><td>2</td><td>TN45X7856</td><td>505</td><td>3000</td><td>30</td><td>0</td><td>3535</td></tr>
<tr><td>3</td><td>TN48H4626</td><td>0</td><td>3800</td><td>38</td><td>0</td><td>3838</td></tr>
<tr><td>4</td><td>TN48AT8614</td><td>0</td><td>3800</td><td>38</td><td>80</td><td>3918</td></tr>
<tr><td>5</td><td>கூடுதல் ரூ.</td><td>1010</td><td>13600</td><td>136</td><td>80</td><td>14826</td></tr>
</table>
ரூ.14826/- தொகையை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு காசோலையாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1263/2013/H1)<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:669<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 10.05.2021 | **06** | தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின் கீழ் துறையூர் அரசு மருத்துவமனை சிகிச்சைக்கு நோயாளிகளுடன் வரும் உறவினர்கள் தங்குவதற்கு ஏதுவாக மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு உறைவிடம் கட்டிடம் (Special Shelter) ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் Roc.No.38038/2013/UPA2-1 நாள்.25.02.2021ன்படி துறையூர் நகராட்சிக்கு ரூ.50.00 இலட்சம் விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து முதன்மை மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை துறையூர் அவர்களால் மேற்படி கட்டிடம் அரசு மருத்துவமனை வளாகத்தில் 3500 ச.அடி நிலத்தில் அமைக்க ஒதுக்கீடு செய்து நாள்.14.02.2020ல் வழங்கிய கடிதம் பிரகாரம் மேற்படி இடத்தில் கட்டுமானம் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.2585/2019/இ1)<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:670 அனுமதிக்கப்பட்டது |
| 10.05.2021 | **07** | துறையூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2020-21 நிதியின் கீழ் தார்சாலைகள் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் மற்றும் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் 17.02.2021 அன்று விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.17640/- மட்டும் வழங்க கோரி Accord Advertising Agencies, Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பொற்றுள்ளது. எனவே, தொகை ரூ.17640/- மட்டும் Accord Advertising Agencies, Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. . (ந.க.எண்.2585/2019/இ1)<br>**அலுவலக குறிப்பு**: மேற்படி செலவினம் இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:671 அனுமதிக்கப்பட்டது |
| 10.05.2021 | **08** | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது ந.க.எண்.5304/2021/ஆர்2 நாள்:16.06.2021 தேதிய சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021 நடத்தை விதிகள் நடைமுறைகளின் படி 1. அண்ணா பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் 2. சாமிநாதன் தினசரி மார்க்கெட் தரைக்கடை குத்தகை உரிமம் 31.03.2021-வுடன் முடிவடைந்த நாளிலிருந்து மேலும் (மூன்று மாதங்களுக்கு) 01.04.2021 முதல் 30.06.2021 முடிய தொடர்ந்து நடத்திக்கொள்ள விருப்பம் தெரிவித்து 1. செ.ராஜேந்திரன் மற்றும் 2. செ.முத்துச்சாமி ஆகிய இரு குத்தகை உரிமைதாரர் 19.03.2021 தேதியில் விருப்பம் மனு சமர்ப்பித்துள்ளார்.<br>2021-2022 ஆண்டு முதல் 2023-2024-ம் ஆண்டு குத்தகை இனத்திற்கான பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின் படி மேற்காணும் குத்தகை இனத்தை 31.03.2021-ஐ தொடர்ந்து 30.06.2021 முடிய நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4077/2020/அ1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:672 அனுமதிக்கப்பட்டது |

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

//உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி

# துறையூர் நகராட்சி

2021 ஆம் வருடம் மே மாதம் 31.05.2021 திங்கள் கிழமை (தமிழ் பிலவ வருடம் வைகாசி மாதம் நாள்.18) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

. .

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 31.05.2021 | 01 | ஆணையர் அவர்களது மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதம் 2021 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : பதிவு செய்யலாம் | தீர்மான எண்:673<br>பதிவு செய்யப்பட்டது. |
| 31.05.2021 | 02 | துறையூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பெரியார் நகர், சொரத்தூர் ரோடு, மலையப்பன் சாலை ஆகிய பகுதியில் அமைக்கப்பட்ட நுண் உரம் செயலாக்க மையத்தின் குப்பை அறவை இயந்திர தளவாடங்கள் பழுதடைந்து சரிவர இயக்க இயலாத நிலை ஏற்பட்டதால் பழுதினை சரி செய்யும் பணிக்கு வருவாய் நிதியில் ரூ.2.40 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.602 நாள்.29.01.2021-ல் அனுமதி பெறப்பட்டு தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலானதால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நாள்.09.03.2021ல் அனுமதி பெற்றப்பட்டு பணியினை மேற்கொள்ள | தீர்மான எண்:674<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | விலைப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி தந்த Sri Kaliyamman Trading Corporation என்பவரின் விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு ரூ.237176/- செலவில் பணி செய்து முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>( ந.க.எண்.3644/2015/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மன்றம் பார்வையிட்டு பதியலாம். | |
| 31.05.2021 | **03** | துறையூர் நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2000-ன்படி வீடு வீடாக குப்பை சேகரிக்கும் பணி அனைத்து வார்டுகளிலும் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் பணியிடங்கள் 89 உள்ள நிலையில் தற்பொழுது 47 தூய்மை பணியாளர்கள் பணியிடங்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். தூய்மை பணியாளர்கள் போதிய அளவில் இல்லாததால் குப்பை சேகரித்தல், சாக்கடை சுத்தம் செய்தல், மக்கும் குப்பையிலிருந்து உரம் தயார்செய்தல் உள்ளிட்ட சுகாதாரப்பணிகள் முழுமையாக செய்ய இயலவில்லை. மேலும் டெங்கு காய்ச்சல், கொரோனா நோய் பரவல் தடுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது.<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை தனியார் தூய்மைப்பணியாளர்கள் மூலம் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி இந்நகராட்சிப்பகுதியில் தற்போது துப்புரவு பணியில் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை அகற்றுதல், தெருக்கள் சுத்தம் செய்தல், சாக்கடை சுத்தம் செய்தல், பேருந்து நிலையம், காய்கறி மார்க்கெட் கழிவுகளை அகற்றுதல், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பிரசித்திபெற்ற சிவன் மற்றும் பெருமாள் கோவில்களுக்கு அதிகமாக பொதுமக்கள் வந்து செல்லும் இடங்கள், 18 பள்ளிகளில் வெளியூரிலிருந்து மாணவர்கள் படிப்பிற்காக வருவதால், பொதுமக்கள் அதிகம் கூடுவதால் குப்பைகளை அகற்றிட திருத்திய மதிப்பீட்டின் படி 81 துப்புரவு பணியாளர்களை (Out Sourcing) தனியார் மூலம் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.470 நாள்.04.10.2018-ல் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டு, இவ்வலுவலக ந.க.எண்.4244/2018/எச்1 நாள்.30.10.2018-ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது ந.க.எண்.28369/J3-2018 நாள்.10.12.2018-ம் தேதிய செயல்முறை ஆணையில் துறையூர் நகாட்சியில் (Out sourcing) தனியார் மூலம் மேற்காணும் 81 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணியை மேற்கொள்ள அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.<br>இந்நகராட்சியின் நிதி நிலையை கவனமுடன் பரிசிலினை செய்யப்பட்டு, பொதுமக்களின் பொது சுகாதாரம் பேணி காக்கும் பொருட்டும் நிர்வாக நலன் கருதியும் தூய்மை பணியாளர்கள் 32 நபர்களையும் நுண்யிர் உரக்கிடங்குகளில் உரம் தயாரிக்க 24 நபர்களையும் மொத்தம் 56 நபர்களை, சுய உதவிக்குழு மூலம் பெற்று திடக்கழிவு | தீர்மான எண்:675<br>அனுமதிக்கப்பட்டது |

மேலாண்மை பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணியாளர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது 2017-2018ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.295 அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்பொழுது இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை செயல்திட்டம் கீழ்காணும் விவரப்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரிக்கப்பட்டு வருகிறது.
2. பொது இடங்கள், மற்றும் சாலையோரங்களில் பொது மக்கள் அலட்சியமாக கொட்டப்படும் குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறது.
3. அனைத்து குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களிடம் இருந்து கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.
4. பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படும் இடங்களில் மரக்கன்றுகள் மற்றும் சுவர்களில் வர்ணம் தீட்டும் பணிகள் செய்யப்பட்டு வருகிறது.
5. மின்னனு கழிவுகள் சேகரிக்கும் மையம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.
6. மின்னனு கழிவுகள் லீலா டிரேடர்ஸ் சென்னைக்கு மாதம் ஒருமுறை அனுப்பி வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
7. தடைசெய்யப்பட்ட ஒரு முறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகளை சிமெண்ட் தொழிற்சாலைக்கு எரிபொருள் பயன்பாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.
8. தினசரி நகரில் உற்பத்தியாகும் மக்கும் கழிவுகளை உரமாக்க நுண் உரக்கிடங்கு (MCC) 1. பெரியார் நகர், 2. சொரத்தூர் ரோடு, மற்றும் 3. மலையப்பன் சாலை ஆகிய 3 இடங்களில் 9 மெட்ரிக்டன் கழிவுகளைக்கொண்டு உரம் தயாரிக்கும் பணி செய்யப்பட்டு வருகிறது.
9. தினசரி நகரில் வணிக நிறுவனங்களில் இருந்து உருவாகும் கழிவுகளில் 100 கிலோவிற்கு மேல் சேகரமாகும் கழிவுகளை(Bulk Waste Generators) உரிமையாளர்களே உரம் தயாரிக்கும் முறையை விழிப்புணர்வு செய்து உரம் தயாரிக்கும் பணியை மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது.
10. இதனைத்தவிர நகராட்சி ஆணையர் அவர்கள் அவ்வப்போது வழங்கும் அறிவுறைகளின்படி சிறப்பு பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

இந்நகராட்சிப்பகுதியில் மொத்தம் 24 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது. நகராட்சிப்பகுதியில் தற்பொழுது 36539 மக்கள் வசித்து வருகிறார்கள். மொத்த குடியிருப்புகள் 12026-ஆக உள்ளது. துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் 2018 முதல் தற்போது 9 நிரந்தர தூய்மை பணியளர்கள் ஓய்வு பெற்று விட்டதால் திடக்கழிவு மேலாண்மை பணிகளான வீடு வீடாக கழிவுகளை தரம் பிரித்து வாங்குவதில் பற்றாக்குறை ஏற்படுவதாலும், கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் முடிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் தருவாயில் உள்ளதால் அதற்குரிய இரண்டு பணியாளர்கள் மேற்படி பணிகளுக்கு தேவைப்படுவதாலும், நகராட்சி

| | | | |
|---|---|---|---|
| | | நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களது 10.12.2018-ல் அனுமதிக்கப்பட்ட 81 பணியாளர்களில் தற்போது உள்ள 56(Out Sourcing) தூய்மை பணியாளர்கள் மேற்படி பணிகள் செய்ய போதுமானதாக இல்லை. ஆதலால் கூடுதலாக 9 பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மற்றும் கசடு கழிவு மேலாண்மை பணிக்கு அமர்த்திக்கொள்ளவும் மேலும் கடந்த 2017-18ம் ஆண்டு மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் ரூ.295/- சம்பளம் இது வரை வழங்கப்பட்டு வந்துள்ள நிலையில் மேலும் இதுவரை ஊதிய உயர்வும் வழங்கப்பட்டாததால் இப்பணியாளர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது ந.க.எண்.J3/9779/2018 நாள்.16.08.2019 செயல்முறை ஆணையில் கண்டுள்ள II Unskilled Employee-க்கான (2019-20)ம் ஆண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் ஊதியம் ரூ.385/- தினக்கூலியாக வழங்கிட பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி பெற பணிந்து வைக்கப்படுகிறது.(ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 31.05.2021 | **04** | துறையூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண்.TN 48 AQ 1221, 15000 கி.மீ ஓடிய நிலையில் ஓட்டுநரால் குறிப்பிட்டுள்ள பழுதுகளை நாள்.21.04.2021ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதி பெற்று M/s Hyundai நிறுவனம் மூலம் ரூ.14522/- செலவில் பணி செய்து முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.( ந.க.எண்.1223/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மன்றம் பார்வையிட்டு பதியலாம். | தீர்மான எண்:676<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **05** | துறையூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளி கட்டிடம் மராமத்து பணிகள் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நாள்.04.03.2021ல் அனுமதி பெற்றப்பட்டு பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி தந்த ஒப்பந்ததாரர் திரு.K.ராஜேஷ் அவர்களின் விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு ரூ.966706/- செலவில் பணி செய்து முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.( ந.க.எண்.660/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | தீர்மான எண்:677<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **06** | இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய நகராட்சி அலுவலக வளாக கடை எண்.14 திரு.கே.குருநாதன் என்பவர் நடத்திவருகிறார். அன்னாரது கடையின் வாடகை 2020 கொரோனா ஊரடங்கு காலத்தில் கடை 4/2020 மற்றும் 5/2020 இரண்டுமாத வாடகை அரசானை மற்றும் இந்நகர் மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் தள்ளுபடி செய்தது. | தீர்மான எண்:678<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அன்னார் மேலும் 6/2020 மாதம் முதல் 9/2020 மாதம் முடிய தள்ளுபடி செய்ய கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். WP(MD) No.6072 of-2021-ன் படி நகராட்சி மீது வழக்கு தொடர்ந்துயுள்ளார்.<br>மேற்காணும் வழக்கில் திரு.எம்.ராஜராஜன் கூடுதல் அரசு வழக்கறிஞர் மதுரை அவர்கள் நகராட்சி சார்பாக ஆஜராகி நடத்தி கொடுக்க அனுமதிக்கும் மற்றும் வழக்கறிஞர் அவகள் மேற்படி வழக்கை நடத்தி கொடுக்க வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/- 17.03.2021 கேட்பின்படி வழக்கறிஞர் கட்டணம் செலவினம் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.292/2021/அ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/- செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செய்துக்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 31.05.2021 | **07** | சென்னை உயர்நீதி மன்றம் மதுரைகிளை வழக்கு எண். W.P.No.8713/2019-ன் தீர்ப்பு நாள்: 19.03.2021-ன் மீது மேல்நடவடிக்கை மேற்கொள்ளவது குறித்து உரிய சட்டக்கருத்து திரு.எம்.ராஜராஜன் BA.BL., கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் 20.04.2021-ம் தேதியில் சட்டக்கருத்துரு வழங்கியுள்ளார்கள். இச்சட்டக்கருத்துரு வழங்கியமைக்கு திரு.எம்.ராஜராஜன் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் 20.04.2021-ல் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) கட்டணம் வழங்கிட கேட்பு அனுப்பியுள்ளார்கள். வழக்கறிஞரின் கட்டணம் தொகையை மதுரை கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.3988/சி1/2018)<br>**அலுவலக குறிப்பு :**<br>மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:679<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **08** | சென்னை உயர்நீதி மன்றம் மதுரைகிளை வழக்கு எண். W.P.No.8713/2019-ன் தீர்ப்பு நாள்: 19.03.2021-ன் மீது மேல்நடவடிக்கை மேற்கொள்ளவது குறித்து திரு.எம்.ராஜராஜன் BA.BL., கூடுதல் அரசு வழக்கறிஞர் மதுரை அவர்களிடம் சட்டக்கருத்துரு வழங்கிட 19.04.2021-ல் கோரப்பட்டது. அதன்படி மேற்படி வழக்கின் தீர்ப்பில் தெளிவு இல்லாமல் இருப்பதாகவும் Review Petition சமர்ப்பிக்கவும் சட்டக்கருத்துரு வழங்கியுள்ளாகள்.<br>Review Application (MD)-ன் சமர்ப்பித்து இந்நகராட்சி சார்பாக ஆஜராகி நடத்திக்கொடுக்க அனுமதிக்கும் மற்றும் கூடுதல் அரசு வழக்கறிஞர் மதுரை அவர்கள் மேற்படி வழக்கின் மீது Affidavit Filed செய்திட Affidavit தயார் செய்து வழங்கியமை 20.04.2021-ம் அரசு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழக்கு கோரி கேட்பு வழங்கியுள்ளார்கள். இச்செலவினம் செய்துக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.3988/சி1/2018)<br>**அலுவலக குறிப்பு :**<br>மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:680<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 31.05.2021 | **09** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி, பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.28369/ஜெ3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோர்சிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.651 நாள்.26.02.2021-ல் 01.04.2021 முதல் 30.06..2021 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி இரண்டாவது அலையாக பரவி வருவதை தடுக்கும் நடவடிக்கை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இந்நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் ஒரு பகுதியாக தமிழ் நாடு முழுவதும் 1.G.O (MS) NO.371 Revenue and Disaster Management (DM-IV) department Dated 08.05.2021-ல் 10.05.2021 முதல் 24.05.2021 முடியவும், 2.G.O. (MS) NO.386 Revenue and Disaster Management (DM-IV) department Dated 22.05.2021-ல் 24.05.2021 முதல் 31.05.2021 முடியவும் மற்றும் 3.G.O. (MS) NO.391 Revenue and Disaster Management (DM-IV) department Dated 29.05.2021-ல் 31.05.2021 முதல்07.06.2021 காலை 6.00 மணி வரை, தமிழக அரசு தளர்வுகளற்ற முழு ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கபட்டு உள்ளது. பொது மக்கள், பொது சுகாதாரம் பேணி காக்கும் பொருட்டும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும் மேற்படி பணிகளுக்கு 01.07.2021 முதல் 30.09.2021 வரை (மூன்று மாதங்கள்) நிலா மகளிர் சுய உதவிக் குழுக்கள் 41 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது 2019-2020 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.385 அடிப்படையில் ரூ.15,00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகறிது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:681 அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **10** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 28369/து3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோசிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.650 நாள். 26.02.2021 ல், 01.04.2021 முதல் 30.06.2021 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் காயா ஆண்கள் உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் இரண்டாவது அலையாக பரவி வருவதை தடுக்கும் நடவடிக்கை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இந்நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் ஒரு பகுதியாக தமிழ் நாடு முழுவதும் 1.G.O (MS) NO.371 Revenue and Disaster Management (DM-IV) department Dated 08.05.2021-ல் 10.05.2021 முதல் 24.05.2021 முடியவும், 2.G.O. (MS) NO.386 Revenue and Disaster Management (DM-IV) department Dated 22.05.2021-ல் 24.05.2021 முதல் 31.05.2021 முடியவும் மற்றும் 3.G.O. (MS) NO.391 Revenue and Disaster Management (DM-IV) department Dated 29.05.2021-ல் 31.05.2021 முதல்07.06.2021 காலை 6.00 மணி வரை தமிழக அரசு தளர்வுகளற்ற முழு ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கபட்டு உள்ளது. பொது மக்கள், | தீர்மான எண்:682 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | பொது சுகாதாரதை பேணி காக்கும் பொருட்டும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கும், மேற்படி பணிகளுக்கு 01.07.2021 முதல் 30.09.2021 வரை (மூன்று மாதங்கள்) காயா ஆண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கு 24 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது 2019-20 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.385 அடிப்படையில் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4244.2018.எச்1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். | |
| 31.05.2021 | **11** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலம் திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண்.27-அ3-2017 நாள். .06.2017ன் கடிதத்தில் டெங்கு சிக்கன்குனியா கட்டுப்பாட்டு கொசு ஒழிப்பு பணி தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (Domestic breeding checker) களப்பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.653 நாள்:26.02.2021-ல் 01.04.2021 முதல் 30.06.2021 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் தாழைமலர் சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி இரண்டாவது அலையாக பரவி வருவதை தடுக்கும் நடவடிக்கை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இந்நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் ஒரு பகுதியாக தமிழ் நாடு முழுவதும் 1.G.O (MS) NO.371 Revenue and Disaster Management (DM-IV) department Dated:08.05.2021-ல் 10.05.2021 முதல் 24.05.2021 முடியவும், 2.G.O. (MS) NO.386 Revenue and Disaster Management (DM-IV) department Dated 22.05.2021-ல் 24.05.2021 முதல் 31.05.2021 முடியவும் மற்றும் 3.G.O. (MS) NO.391 Revenue and Disaster Management (DM-IV) department Dated 29.05.2021-ல் 31.05.2021 முதல் 07.06.2021 காலை 6.00 மணி வரை, தமிழக அரசு தளர்வுகளற்ற முழு ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கபட்டு உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ந.க.எண்.5437/2021/ஜே1 நாள்:23.05.2021 சுற்றறிக்கையில் கொரோனா வைரஸ் நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பணிக்கு சுய உதவிக்குழு உறுப்பினர்களை பயன்படுத்திக்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி இந்நகராட்சியில் டெங்குப்பணியாளர்களை கொரோனா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைப்பணிக்கு பயன்படுத்திக்கொள்ளவும் மற்றும் டெங்கு காய்ச்சல் முன் நடவடிக்கை பணியையும் சேர்த்து கவனித்து வரவும் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா தனியார் அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் குடிநீர் தொட்டிகள் சுத்தமாக வைத்துள்ளதை உறுதி செய்தல், நகராட்சி எல்லைக்குட்பட்ட மருத்துவமனைகளை சுகாதாரமாக வைத்துள்ளதை உறுதி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று நோய் பராவமல் இருக்க உரிய நடவடிக்கைகளுக்கு உள்ளூரில் இயங்கி வரும் தாழைமலர் மகளிர் சுய உதவிக்குழு மூலம் மேற்காணும் பணிக்கு 30 | தீர்மான எண்:683 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | களப்பணியாளர்களை 01.07.2021 முதல் 30.09.2021 முடிய நியமித்து கொள்ளவும், மேற்கண்ட பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களது விலைவிகிதத்தில் செலவினம் செய்துகாள்ளவும், மற்றும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சத்திற்குள் செய்துக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2177/13/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் | |
| 31.05.2021 | **12** | நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4840/2018/எச்1 நாள்.21.02.2019 உத்திரவில் 6 LCV வாகனங்கள் 1 காம்பாக்டர் வாகனத்திற்கு Our Sourcing முறையில் 7 ஓட்டுனர்களை இரண்டு வருடங்களுக்கு H.M.S தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் நியமித்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. H.M.S நிறுவனம் ஏப்ரல் 2019 முதல் ஒட்டுனர் பணிக்கு அவுட்சோர்ஸ் முறையில் 7 ஓட்டுனர்களை வழங்கியுள்ளது. இவ்வுத்திரவின்படி 01.04.2019 முதல் 31.03.2021 முடிய H.M.S நிறுவனம் 7 ஓட்டுநர்களை இந்நகராட்சிக்கு சப்ளை செய்து வர மேற்காணும் செயல் முறை உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்று நோய் இரண்டாவது அலையாக பரவி வருவதால் தமிழக அரசு தளர்வுகளற்ற முழு ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கபட்டு சூழ்நிலை உள்ளது. கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுக்கும் நடவடிக்கை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இந்நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் ஒரு பகுதியாக தமிழ் நாடு முழுவதும் 1.G.O (MS) NO.371 Revenue and Disaster Management (DM-IV) department Dated 08.05.2021-ல் 10.05.2021 முதல் 24.05.2021 முடியவும், 2.G.O. (MS) NO.386 Revenue and Disaster Management (DM-IV) department Dated 22.05.2021-ல் 24.05.2021 முதல் 31.05.2021 முடியவும் மற்றும் 3.G.O. (MS) NO.391 Revenue and Disaster Management (DM-IV) department Dated 29.05.2021-ல் 31.05.2021 முதல்07.06.2021 காலை 6.00 மணி வரை முன்னிட்டு இந்நகராட்சி முன்னெச்சரிக்கை மேற்க்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளதால் மேலும் பொது மக்கள் பொது சுகாதாரத்தை பேணிக்காக்கும் பொருட்டும் நிர்வாக நலன் கருதியும் H.M.S நிறுவனத்தின் குறைந்த பட்ச ஒப்பந்தபுள்ளி ரூ.473.25/- தலா ஒருவருக்கு வீதம் 7 ஒட்டுனர்களுக்கு 01.07.2021 முதல் 30.09.2021 வரை பணி அமர்த்தி கொள்ளவும் இந்த ஒட்டுனர்களுக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.10 இலட்சம் செலவினம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4840/2018/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:684<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **13** | சட்டமன்ற தேர்தல் 2021, ஏப்ரல் 6, 2021 அன்று நடைபெற உள்ளதை கருத்தில் கொண்டு துறையூர் தனி, சட்டமன்ற தொகுதி 146-க்குட்பட்ட துறையூர் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள 37 வாக்குப்பதிவு மையங்கள் அமைந்துள்ள 8 பள்ளிக்கட்டிடங்களில் வாக்காளர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, மின்விசிறி வசதி, சாமியானா பந்தல், முன்மாதிரி வாக்குச்சாவடி அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.3.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலில் | தீர்மான எண்:685<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>இருந்ததாலும் பணியினை உடனடியாக செய்து முடித்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவல் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்ததாலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15-ன் கீழ் நாள்.31.03.2021ல் அனுமதி பெற்று நாள்.01.04.2021 அன்று பெறப்பட்ட அடியிற்கண்ட விலைப்புள்ளிகளில்
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>விலைப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.K.சரவணன்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீடு விலை விகிதம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.T.இந்திரஜித்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.50% அதிகம்</td></tr>
<tr><td>3</td><td>திரு.K.ராஜேஷ்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.67% அதிகம்</td></tr>
</table>
குறைந்த விலைப்புள்ளி தந்த வ.எண்.1ல் உள்ள திரு.K.சரவணன் ஒப்பந்ததாரர் மதிப்பீடு விலைவிகிதத்தில் குறிப்பிட்டதை ஏற்று வேலை உத்திரவு வழங்கி செலவினம் ரூ.3.00 இலட்சத்தில் பணி முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும். (ந.க.எண்.1054/2021/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.05.2021</td>
<td>14</td>
<td>துறையூர் நகராட்சி வார்டு எண்.18, சொரத்தூர் சாலை உரக்கிடங்கு செல்லும் நுழைவு வாயிலின் முன்புறம் உள்ள சிதிலமடைந்து பயன்பாட்டில் இல்லாத கழிவறைகளை சீரமைத்து பயன்பாட்டுக்கு கொண்டு வர உயர்திரு துறையூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழங்கிய அறிவுரைகள் பிரகாரம் கழிவறை சீரமைத்தல் பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1542/2021/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:686<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.05.2021</td>
<td>15</td>
<td>துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் தங்கு தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யும் போது அவ்வப்போது ஏற்படும் அடைப்பு மற்றும் திடீர் உடைப்புகளினால் குடிநீர் விநியோகம் தடைபடும் சூழ்நிலை உருவாகிறது.<br>
எனவே, பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் அடைப்பினை சரி செய்யவும் மற்றும் திடீர் உடைப்பினை சரி செய்யவும் 2021-22ம் ஆண்டிற்கு குடிநீர் பராமரிப்பு பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.1540/2021/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம்</td>
<td>தீர்மான எண்:687<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிக்கலாம். | |
| 31.05.2021 | **16** | துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் ஆழ்துளை கிணறு மூலம் மினி பவர் பம்பு மற்றும் கைபம்பு அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வப்போது ஏற்படும் மின்மோட்டார் மற்றும் கைபம்புகளில் பழுதுகளை சரிசெய்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ள 2021-22ம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1541/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:688<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **17** | துறையூர் நகராட்சி வார்டு எண்.19 நெசவாளர் காலனி பூங்கா அமைவிடத்தில் பூங்காவை சுற்றிலும் உட்புறம் பொதுமக்கள் நடந்து சென்று உடற்பயிற்சி மேற்கொள்ள நடைமேடை அமைத்து தருமாறு உயர்திரு துறையூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நகராட்சி ஆணையரிடம் நேரில் தெரிவித்ததை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டு (Walking Platform) நடைமேடை அமைக்க மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1543/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>மேற்படி செலவினம் இந்நகராட்சி மனைப்பிரிவு அபிவிருத்தி கட்டணம் / பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:689<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **18** | துறையூர் நகராட்சி பழைய அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அமைக்கப்பட்டுள்ள 2.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுடைய தரைமட்டத் தொட்டியில் Chlorination செய்ய ஏதுவாக நகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள Gas Chlorination Plant-க்கு மாதம் ஒன்றுக்கு 2.25kg சிலிண்டர் என்ற அளவில் 2021 ஜனவரி மாதம் முதல் 2021 டிசம்பர் வரை 27 சிலிண்டர்கள் தேவைப்படுகிறது.<br><br>தேவைப்படும் சிலிண்டர்களை Gas Chlorination Plant-ஐ நிறுவிய R.K.Enterprises-ல் இருந்து தேவைக்கேற்ப அவ்வப்போது கொள்முதல் செய்துகொள்ளவும் உத்தேச செலவினம் (27x7500=2,02,500/-) ரூ.2,02,500/- குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1539/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் | தீர்மான எண்:690<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.05.2021</td><td>19</td><td>துறையூர் நகராட்சியில், வார்டு எண்.5 வடக்குத்தெருவில் குடிநீர் பயன்பாடு அல்லாத பிற உபயோகத்திற்ககாக பயன்படுத்தப்படும் குழாய்கள் பழுதடைந்துள்ளதால் அதனை சீரமைக்கும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.160/2021/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மன்ற அனுமதி எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:691<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.05.2021</td><td>20</td><td>துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பரவலை தடுத்திடும் பொருட்டு செலவினம் மேற்கொள்ள ஏற்கனவே நகர் மன்ற தீர்மான எண்.655 நாள். 26.02.2021-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி மற்றும் பொது சுகாதார நடவடிக்கைகளுக்கு கீழ்க்கண்ட சுகாதார கிருமி நாசினிகள் வாங்கிகொள்ள 28.05.2021 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பொருட்களின் விபரம்</th><th>SRI AKSHAYA TRADERS, No.4/10 East Sarayapattarai Street, Woraiyur, Trichy-620 003.</th><th>THIRUMALAI TRADERS, FF-3,Renga ,Compiex, Near Ramba Theatre, Trichy-620 002</th><th>SRI AMMAN AGENCIES Shop NO.3, 1/3856/1, Gokulam colony, bikshandarkovil, No.1. Tolgate, Trichy-621 216.</th></tr>
<tr><td>1</td><td>Lime Stone Powder</td><td>Per kg Rs.12/- (GST Extra)</td><td>Per kg Rs.9.50/- (GST Extra)</td><td>Per kg Rs.13/- (GST Extra)</td></tr>
<tr><td>2</td><td>Bleaching Powder</td><td>Per Litter Rs.60/- (GST Extra)</td><td>Per Litter Rs.42.373/- (GST Extra)</td><td>Per Litter Rs.65/- (GST Extra)</td></tr>
<tr><td>3</td><td>Hand Sanitizer</td><td>Per Litter Rs.520/- (GST Extra)</td><td>Per Litter Rs.446.429/- (GST Extra)</td><td>Per Litter Rs.530/- (GST Extra)</td></tr>
<tr><td>4</td><td>Hand Rubber Gloves</td><td>One Set Rs.250/- (GST Extra)</td><td>One Set Rs.203.90/- (GST Extra)</td><td>One Set Rs.260/- (GST Extra)</td></tr>
<tr><td>5</td><td>Lysol</td><td>Per Litter Rs.194/- (GST Extra)</td><td>Per Litter Rs.160/- (GST Extra)</td><td>Per Litter Rs.198/- (GST Extra)</td></tr>
<tr><td>6</td><td>Hypo chloride</td><td>Per Litter Rs.32/- (GST Extra)</td><td>Per Litter Rs.24/- (GST Extra)</td><td>Per Litter Rs.34/- (GST Extra)</td></tr>
<tr><td>7</td><td>3 Ply Mask</td><td>One Set Rs.5/- (GST</td><td>One Set Rs.4/- (GST</td><td>One Set Rs.6/- (GST</td></tr>
</table></td><td>தீர்மான எண்:692<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | Extra) | Extra) | Extra) |
| 8 | Soap Oil | Per Litter Rs.85/- (GST Extra) | Per Litter Rs.69/- (GST Extra) | Per Litter Rs.90/- (GST Extra) |
| | | | | |
| | | | | |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்டவாறு வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் திருமலை டிரேடர்ஸ் திருச்சி அவர்களது விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மேலும், கொரோனா நோய் தொற்று பரவல் தடுப்பு முன் நடவடிக்கை பணிக்கு மேற்கண்ட கிருமி நாசினிகள் அவசியம் தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர்/ஆணையரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருமலை டிரேடர்ஸ் திருச்சி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தினை SDRF(COVID-19)நிதியின் கிழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண் 810/2020/எச்1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். | |
| 31.05.2021 | **21** | இந்நகராட்சி **2020-2021-ம்** ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்1514/2021/சி1)**<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம் | தீர்மான எண்:693<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **22** | துறையூர் நகராட்சி வார்டு எண்.3, கிழக்கு தெப்பக்குளத் தெருவில் குடிநீர் அல்லாத பயன்பாட்டுக்கான குழாய்கள் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டும், பராமரப்பும் இல்லாததால், வார்டு எண்.3 பகுதிகளில் தண்ணீர் விநியோகம் பாதிப்படைந்ததை சரி செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.70000/-த்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.1536/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:694<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **23** | துறையூர் நகராட்சி வார்டு எண்.10, புதுக்காட்டுத்தெருவில் ஆழ்குழாய் கிணறுடன் கூடிய சிறுமின்விசைபம்பு அமைத்து தருமாறு பொதுமக்கள் கோரியதை தொடர்ந்தும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரைத்ததன் படியும் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1422/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:695<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **24** | இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிமம் 2021-2022 -;ம் ஒப்படைக்கும் நாள் 2022-2024-ம் ஆண்டு முடிய நகராட்சியின் மூன்றாண்டு குத்தகை உரிமம் வைப்புத்தொகை அறிவிப்பு ஆண்டு குத்தகை இனம் மற்றும் கடைகளுக்கான குத்தகை உரிமம் 2021-2022-ம் | தீர்மான எண்:696<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>ஆண்டு ஒப்டைக்கும் நாள் முதல் 2023-2024ம் ஆண்டு முடிய ஏலவைப்புத்தொகை பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் நகர்மன்ற தீர்மானம் எண்.578. நாள் 31.12.2021–ம் தேதியில் அனுமதிக்கப்பட்ட விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்டநாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினமலர், திருச்சி பதிப்பு</td><td>13.02.2021</td><td>ரூ.8669/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு Adwave Advertising Private Ltd., Chennai, நிறுவனம் ரூ.8669/- வழங்க கேட்டுக்கோன்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.4077/2020/அ1)<br>
அலுவலககுறிப்பு: அ) அனுமதிக்கலாம்<br>
ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.05.2021</td>
<td>25</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுக்கான 2023-2024ம் ஆண்டு வரைக்கான உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் சிறப்பு நிபந்தனைகள் படி அனுபவித்துக்கொள்ளும் உரிமைக்கு ஆண்டு குத்தகை இனம் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், அண்ணா பேருந்து நிரலயத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரிமார்கெட் தரைகடை குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரி மார்கெட் கடைகள் 15,16,17,34,42,43.44. மற்றும் 45 க்கான குத்தகை உரிமம், வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5,9,10,18 மற்றும் 23 கடைகளுக்கும் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 03.03.2020-ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்டநாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினமலர், திருச்சி பதிப்பு</td><td>13.02.2021</td><td>ரூ.7224/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு Adwave Advertising Private Ltd., Chennai, நிறுவனம் ரூ.7224/- வழங்க கேட்டுக்கோன்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4077/2020/அ1)<br>
அலுவலககுறிப்பு: அ) அனுமதிக்கலாம்<br>
ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம்</td>
<td>தீர்மான எண்:697 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 31.05.2021 | **26** | தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் நாள்.09.03.2021ல் இந்நகராட்சியில் ஆய்வு செய்தபோது துறையூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட 14 BOV வாகனங்கள் சரிவர பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதை ஆய்வு செய்து துறையூர் நகராட்சியில் தேசிய பசுமை தீர்ப்பாய நீதியரசர் விரைவில் கள ஆய்வுகள் மேற்கொள்ள உள்ளதால் மேற்படி வாகனங்களின் பழுதுகளை சீரமைத்து தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறு வழங்கிய அறிவுரைகளின் பிரகாரம் முற்றிலும் சேதமடைந்த 6 எண்ணிக்கை BOV வாகனங்களை சீரமைக்க பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நாள்.09.03.2021ல் அனுமதி பெறறப்பட்டு பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி தந்த Jayam Equipments நிறுவனத்தின் விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு ரூ.190128/- செலவில் பணி செய்து முடிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.3644/2015/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மன்றம் பார்வையிட்டு பதியலாம் | தீர்மான எண்:698<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **27** | துறையூர் நகராட்சியில் கொரோனா நோய் தொற்று இரண்டாவது அலை பரவலின் தாக்கம் அதிகமாக நாடு முழுவதும் பரவி வருவதாலும் முன் தடுப்பு நடவடிக்கை பணிக்காக நகராட்சி அலுவலகத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக தினசரி வார்டு வாரியாகவும் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கபசுர குடிநீர் வழங்க அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் Tampcol Chennai என்ற நிறுவனத்திடம் வாங்கிக்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.810/2020/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:699<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.05.2021 | **28** | இந்நகராட்சியில் காசாளராக பணியாற்றி வரும் திருமதி.ம.செல்வி என்பவர் 31.03.2021-ம் தேதிய மனுவில், 19.01.2021-ம் தேதி ஆய்வர், காவல் துறை, துறையூர் குடியிருப்பு கட்டிடங்களுக்கு குடிநீர் வைப்புத்தொகை சென்டேஜ் கட்டணம் செலுத்திய போது கணினியில் ரசீது பிரிண்ட் எடுக்கும் போது இணையதளம் நெட் ஒர்க் (Net Problem) காரணமாக சிட்டா வரிசை எண்.137, 138-ல் கண்டுள்ள தொகை ரூ.9220/- இரு முறை பதிவாகிவிட்டது என தெரிவித்தும், 2-ம் முறை பதிவான தொகை ரூ.9220/-யை நிர்வாக நலன் கருதி 31.03.2021-ம் தேதி துறையூர் மாநில பாரத வங்கியில் சலான் மூலம் ரொக்கமாக என்னால் செலுத்தப்பட்டது என தெரிவித்தும், மேலும் என்னால் செலுத்தப்பட்ட தொகையை திருப்பி வழங்க கோரியும் மனு சமர்ப்பித்துள்ளார்.<br>அன்னாரின் மனு பரிசீலனை செய்யப்பட்டது. எனவே, திருமதி.ம.செல்வி | தீர்மான எண்:700<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இளநிலை உதவியாளர் (காசாளர்) 31.03.2021-ம் தேதியில் செலுத்தப்பட்ட தொகை ரூ.9220/-யை அன்னாருக்கு திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.286/2021/சி1)<br>**அலுவலக குறிப்பு:**<br>மேற்காணும் தொகை ரூ.9220/-யை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். | |

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

/ /உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி